

முதலமைச்சர் கழகத்தலைவர் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்க தருமபுரி மாவட்டத்திற்கு வருகை தர உள்ளதால் விழா நடைபெறும் இடம்,மற்றும் முன்னேற்பாடுகள் குறித்து வேளாண்மை மற்றும் உழவர் நல துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேரில் ஆய்வு செய்தார்.உடன் மாவட்ட ஆட்சியர் ரெ.சதீஸ்,மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.எஸ்.மகேஸ்வரன்,தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி எம்.பி,மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன்,முன்னாள் மாவட்ட செயலாளர் தடங்கம்.பெ. சுப்ரமணி,பந்தல் சிவா,மற்றும் கழக ஒன்றிய செயலாளர்கள்,அரசு அலுவலர்கள் உள்ளது.

### அமைச்சர் பி.கே. சேகர் பாபு முன்னிலை! ‘போராளி ஓய்வதில்லை’ சென்னை கிழக்கு

# மாவட்ட மருத்துவரணி சார்பில் கலைஞர் நினைவு நாள்! மருத்துவ முகாம்!

### ஜி.சாந்தகுமாரி எம்.சி தலைமையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்!





சென்னை,ஆக.11-

சென்னை கிழக்கு மாவட்ட மருத்துவ அணி சார்பில் போராளி ஓய்வதில்லை முத்தமிழறிஞர் ஏழாம் ஆண்டு நினைவை முன்னிட்டு யாவரும் நலமாகட்டும்! திராவிடம் நிலமாளட்டும்! எனும் தலைப்பில் மாபெரும் மருத்துவ முகாம் நேற்று 10.08.2025, ஞாயிற்றுக்கிழமை, காலை: 9.00 மணியளவில் அம்பத்தூரில் உள்ள எஸ்.எம்.கே. மகாலில் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு முன்னிலையில் மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர். ஜி.சாந்தகுமாரி எம்.சி தலைமையில் நடைபெற்ற மருத்துவ முகாமை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திருமா. சுப்ரமணியன் அவர்கள் துவக்கி வைத்து சிறப்பித்தார்.

மருத்துவ முகாமில் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர், அம்பத்தூர் வடக்கு பகுதி கழகச் செயலாளர் ஜோசப் சாமுவேல் எம்எல்ஏ. பி.கே.மூர்த்தி, எம்.சி, டி எஸ் பி ராஜகோபால் எம்சி எம்.டி.ஆர்.நாகராஜ், சன். பி.முனியாண்டி, எல்.பி.எப். மோகன், டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா எம்.சி,, வி.ரமேஷ்(எ) நீலகண்டன் எம்.சி,, ஜி. வி.நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி, து.ஆயிரம்.ஜெ.பாலமுருகன்.அம்பத்தூர்/கிழக்கு வடக்கு/ தெற்கு/ வட்ட கழக செயலாளர்கள்: மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜயகுமார், த.வ.லால் பி.செந்தில்.வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ.ராதாகிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ. சேகர் எம்.சி, நா.நெப்போலியன், ஆர்.டீக்கா, மருத்துவ முகாமில் வட்டக் கழகச் செயலாளர்

மு .ரகு மருத்துவ அணி அமைப்பாளர் வி .அன்பு ஆகியோர் நன்றி கூறினர்.

### அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலை! கொளத்தூர் மேற்கு பகுதி

# இளைஞரணி சார்பில் கலைஞர் நினைவு நாள் ரத்ததான முகாம்!

### என்.திலிப் குமார் தலைமையில் டாக்டர் நா.எழிலன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

சென்னை,ஆக.11-

சென்னை கிழக்கு மாவட்ட கொளத்தூர் மேற்கு பகுதி இளைஞரணி சா ர்பில் போராளி ஓய்வதில்லை முத்தமிழ் அறிஞர் ஏழாம் ஆண்டு நினைவை முன்னிட்டு கலைஞர் கனவு உதிரத்தில்! தலைவர் உணர்வு இதயத்தில்! எனும் தலைப்பில் மாபெரும் ரத்ததான முகாம் நேற்று 10.08.2025, ஞாயிற்றுக்கிழமை, காலை:8.00 மணியளவில் சென்னை கொளத்தூர் அகரம் பகுதியில் உள்ள ஸ்ரீ முருகன் திருமண மாளிகை, (நால்வர் திரு மண மாளிகையில் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி கே சேகர்பாபு அவர்கள் முன்னிலையில் கொளத்தூர் மேற்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் என்.திலிப் குமார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாபெரும் ரத்ததான முகாமில் கழக மருத்துவ அணி செயலாளர் டாக்டர். நா.எழிலன் எம் எல் ஏ அவர்கள் ரத்ததான முகாமை துவக்கி வைத்தார்.

இந்த ரத்ததான முகாமில் பகுதி கழகச் செயலாளர்கள் எ.நாகராஜன்.எம்.சி., ஐ.சி.எப்.முரளிதரன் , கே.சந்துரு, சி.மகேஷ்குமார் , சரிதா மகேஷ்குமார் எம் சி,தேவஜவகர், வானவில் விஜய், எஸ்.பன்னீர்செல்வம், துரை கண்ணன் எஸ். தனசேகர் ஆர் எஸ் சித்திக். ம.அசோக்குமார் ஜெ.பாலமுருகன் பா.ஜெகதீஷ் கே. வினோத் ஜி.ஜே.பிரபு ஆர். டி.சங்கர்நானா. கே பிரசாத். டி.யோகப்பிரியா, என். தாவூத் பீ, பி.அமுதா, சி.ஸ்ரீதணி, வட்ட கழக செயலாளர்கள்: பி.ஊமைத்துரை, கே.பி.ஆதவன்மணி, என்.பொன்முடி, கே.ஜார்ஜ் குமார், பி.டி.சி.எஸ்.ரவி, பா.அன்பரசு, டி.சந்திர சேகர், எஸ்.முருகன், எம். பி.தமிழ்ச்செல்வன், என். சௌந்தர், என்.பவுல்ராஜ், என்.இராமச்சந்திரன் இந்த ரத்ததான முகாமில் வட்டக் கழக செயலாளர்கள் எம். ஜெ.சி.பாபு, பி.அதிபதி. ஆகியோர் நன்றி கூறினார்கள்.

### தமிழக முதல்வரின் கனவு திட்டமான

# ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

### அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி துவக்கி வைத்தார்!



திருவெறும்பூர், ஆக. 11 –

தமிழக மக்கள் நலன் பெனும் வகையில் தமிழக முதல்வர் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார் மேலும் இதன் ஒரு பகுதியாக தமிழகம் முழுவதும் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் ஒவ்வொரு மாவட்டங்களிலும் மக்களின் பயன்பாட்டிற்காக நடைபெற்று வருகிறது மேலும் இதன் ஒரு பகுதியாக திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தனியார் கல்லூரியில் நலம் காக்கும் ஸ்டாலின் முகாமினை திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினரும் தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி துவக்கி வைத்தார்.

மேலும் இந்நிகழ்வில் 27 மருத்துவ துறை சார்ந்த பிரிவுகள் கலந்து கொண்டு பொதுமக்களின் உடல் சார்ந்த பிரச்சினைகள் மற்றும் அவர்களுக்கு உண்டான நோய்களுக்கு சம்பந்தமான மருந்துகள் மற்றும் அதற்குத் தேவையான விளக்கங்கள் மருத்துவர்கள் வழங்கினர்.

மேலும் இந்த மருத்துவ முகாமில் இருதய நோய் காச நோய் கண் சிகிச்சை புற்றுநோய் தோல் சம்பந்தமான பிரச்சனைகள் என ஏராளமான துறைகளை சார்ந்த மருத்துவர்கள் இந்த முகாமில் கலந்து கொண்டு பொது மக்களுக்கு நோய்கள் தீர்ப்பதற் கான தீர்வை விரிவாக எடுத்துரைத்தனர்

மேலும் இந்த முகாமில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் தனது திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சுமார் 11 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கியும் காச நோயாளிகளுக்கான ஊட்டச்சத்து பெட்டகம் 10 பேருக்கும் கர்ப்பிணி பெண்களுக்கான ஊட்டச்சத்து பெட்டகம் ஐந்து பேருக்கும் துப்புரவு தொழிலாளர்கள் சுமார் ஐந்து பேருக்கு தூய்மை நல வாரிய அடடையையும் வழங்கினார் மேலும் இதனை அடுத்து முகாமை ஆய்வு மேற்கொண்ட தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் சூரியூர் கிராமத்தை சேர்ந்த ஐந்து வயது, ரித்திக் என்ற இளைஞன் கால் ஊனம் ஏற்பட்டு பல ஆண்டு காலமாக சிரமப்பட்டு வந்த நிலையில் நடைபெற்ற முகாமில் உடனடியாக மருத்துவர்கள் அழைத்து இதற்கு உண்டான சிகிச்சையினை மேற்கொள்ள வேண்டும் என உத்தரவிட்டார் இதே போல் கட்டுரை சேர்ந்த மூன்று வயது தர்ஷிகா என்ற குழந்தைக்கு கன்னத்தில் பிறவியிலேயே கட்டியிருந்ததைக் கண்ட அவரது பெற்றோர்கள் தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சரிடம் எடுத்துரைத்தனர் இதனை அடுத்து மருத்துவரை அழைத்து இதற்கு உண்டான பரிசோதனை மேற்கொண்டு உடனடியாக இதை சரி செய்ய வேண்டும் என மருத்துவர்களிடம் எடுத்துரைத்தார்

மேலும் இந்த முகாமில் திருச்சி மாவட்ட ஆட்சியர் வே.சரவணன் மருத்துவக் கல்லூரி முதல்வர் குமரவேல்.மண்டலம் மூன்றின் தலைவர் மு.மதிவாணன், மாவட்ட மருத்துவ இணை இயக்குனர் கோபிநாத், மாவட்ட சுகாதார அலுவலர் ஹேமச்சந்திரன், மாநகராட்சி சுகாதார அலுவலர் விஜயசந்திரன்,

உதவி செயற்பொறியாளர் ஜெகஜீவராமன், மாமன்ற உறுப்பினர்கள் நீலமேகம், தியாஹிதீன், செந்தில், கார்த்திக், ரெக்ஸ், மற்றும் மருத்துவத்துறை உயர் அதிகாரிகள் மாநகராட்சி மாவட்ட அலுவலர்கள் உடன் இருந்தனர் மற்றும் பல்வேறு பொதுமக்கள் கலந்துகொண்டு இம்மருத்துவ முகாமில் பயன் பெற்றனர்.

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேட்டி

எடப்பாடி பழனிச்சாமி தமிழ்நாடு முதல்வராக இருந்த பொழுது டெண்டர் விடுவதில் மட்டும்தான் கவனம் செலுத்தி கொண்டு இருந்தாரே தவிர தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு கவனம் செலுத்தவில்லை. தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு நான் தான் காரணம் என எந்த பெயரையும் தான் எடுத்துக் கொள்ள வேண்டும் என எடப்பாடி பழனிச்சாமி நினைத்து கூட பார்க்க கூடாது.

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேட்டி!**

செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மக்களுக்கான மிகப் பெரிய திட்டமாக நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் அமைந்துள்ளது. நாட்டை காக்கும் ஸ்டாலின் தான் மாநில கல்வி கொள்கை. தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்ற பின் கல்விக்கு அடித்தள மிட்டு நல்ல முடிவுகளை கொடுக்க துவங்கி விட்டோம். அந்த அடித்தளத்தின் மேல் என்னென்ன செய்ய உள்ளோம் என்பதை தொலைநோக்கு பார்வையுடன் கூறி விட்டோம். தமிழ்நாடு மாநில கல்வி கொள்கையை அலசி ஆராய்ந்து மற்ற மாநிலங்களும் பின்பற்றி னால் மாணவர்கள் உயர்நிலையை அடைவார்கள். பன்னிரெண்டாம் வகுப்பு முடித்து விட்டு உயர் கல்வி நிறுவனங்களில் மாணவர்களை சேர்த்துள்ளோம். மாணவர்கள் கனவு மட்டும் கண்டால் போதும் அதை நாங்கள் நிறைவேற்றித் தருகிறோம் எனக் கூறுவது தான் மாநில கல்விக் கொள்கை.

மாணவர்களுக்கு எந்தவித அழுத்தமும் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் 11 ஆம் வகுப்பு பொதுத் தேர்வை ரத்து செய்துள்ளோம்.

தமிழ்நாடு இரு மொழிக் கொள்கைதான் பி ன்பற்றும் என முதல்வர் உறுதியாக கூறியுள்ளார் மூன்றாவது ஒரு மொழி அல்ல 22 ஆவது அட்டவணையில் உள்ள அனைத்து மொழிகளையும் படிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம் ஆனால் எதையும் கட்டாயப்படுத்த கூடாது.

தமிழ் மொழி, தமிழ்நாடு கலாச்சாரம் உள்ளிட்டவற்றை அடிப்படையாகக் கொண்டு நமக்காக தனித்துவமாக உருவாக்கப்பட்டது தான் மாநிலங்களுக்கு கொள்கை.

மாநில கல்விக் கொள்கையை அரசியல் காரணங்களுக்காக யாரும் விமர்சனம் செய்ய வேண்டாம். மாநில கல்விக் கொள்கையால் என்ன பயன் என்பதை ஆராய்ந்து விட்டு அதன் பின் இது குறித்து பேசலாம்.

14 ஆண்டுகளுக்குப் பின்பு தமிழ்நாடு பொருளாதார வளர்ச்சியில் இரட்டை இலக்கத்தை தற்பொழுது தான் அடைந்துள்ளதாக ஒன்றிய அரசே கூறியுள்ளது. கலைஞர் ஆட்சிக்காலத்தில் 3.12 சதவீதமாக இருந்தது அதன் பின் அ.தி.மு.க ஆட்சியில் வெகுவாக குறைந்தது மீண்டும் திமுக ஆட்சி அமைந்த பின் 11.19 சதவீதம் பொருளாதார வளர்ச்சியை தமிழ்நாடு அடைந்துள்ளது.

எடப்பாடி பழனிச்சாமி முதல்வராக இருந்த பொழுது பொதுப் பணி துறையையும் நெடுஞ்சாலை துறையையும் தன் வசம் வைத்துக் கொண்டு டெண்டர் விடுவதில் மட்டுமே அவர் கவனம் செலுத்திக் கொண்டிருந்தார். நாட்டின் வளர்ச்சிக்கு அவர் கவனம் செலுத்தவில்லை ஆனால் தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு கவனம் செலுத்துகிறார். விளிம்பு நிலை மக்களுக்காக உழைக்கிறார். தமிழ்நாடு வளர்ச்சிக்கு தான் தான் காரணம் என எந்த ஒரு பெயரையும் எடப்பாடி பழனிச்சாமி தான் எடுத்துக் கொள்ள வேண்டும் என நினைத்து கூட பார்க்க கூடாது என்றார்.

### புத்துயிர் மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான அடல் இயக்கத்தின் (அம்ருட்) கீழ்

# தமிழ்நாட்டில் அமைக்கப்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் மொத்த எண்ணிக்கை என்ன?

### மக்களவையில் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் கேள்வி!



புதுடெல்லி, ஆக. 11-

புத்துயிர் மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான அடல் இயக்கத்தின் (அம்ருட்) கீழ் இன்று வரை தமிழ்நாட்டில் அமைக்கப்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் மொத்த எண்ணிக்கை மற்றும் இவற்றில் செயல்படும் ஆலைகள் எத்தனை!

ஒவ்வொரு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கும் ஆலை வாரியாக ஒதுக்கப்பட்ட, விடுவிக்கப்பட்ட மற்றும் செலவிடப்பட்ட மொத்த நிதி எவ்வளவு? தமிழ்நாட்டில் பொதுவான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைப்பதற்கு அரசு ஏதேனும் நிதியை விடுவித்துள்ளதா மற்றும் அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

அம்ருட்டின் கீழ் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள இத்தகைய பொதுவான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு என்று மக்களவையில் கோயம்புத்தூர் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் கேள்வி எழுப்பியுள்ளார்.

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தின் பதில் வருமாறு :- கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (STP) பொதுவான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (CETP) என்பது மாநில அரசுகள் மற்றும் சம்பந்தப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (ULBs) நகர்ப்புற மேம்பாட்டு அதிகாரிகளின் பொறுப்பாகும். திட்டவட்டமான தலையீடுகள், ஆலோசனைகள் மூலம் மாநிலங்களின் முயற்சிகளுக்கு ஒன்றிய அரசு துணைபுரிகிறது. புத்துணர்ச்சி மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான அடல் மிஷன் (AMRUT) மற்றும் AMRUT 2.0 போன்ற பல்வேறு திட்டங்கள், மிஷன்கள் மூலம் மாநிலங்களுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவை வழங்குகிறது.

அம்ருட்டின் கீழ், மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் (UTs) திட்டங்களைத் தேர்ந்தெடுக்கவும், மதிப்பிடவும், முன்னுரிமை அளிக்கவும் மற்றும் செயல் படுத்தவும் அதிகாரம் பெற்றுள்ளன. திட்டப்பணிகள் முடிவடைந்த பிறகு அவற்றைப் பராமரிப்பதும் மாநில அரசுகள் ULBகளின் பொறுப்பாகும்.

AMRUT போர்ட்டலில் மாநில அறிக்கையின்படி, ரூ.5,670.8 கோடி மதிப்பிலான 18 கழிவுநீர் மற்றும் கழிவுநீர் மேலாண்மை திட்டங்கள் AMRUT இன் கீழ் தரையிறக்கப் பட்டுள்ளன. AMRUT இன் கீழ் நாள் ஒன்றுக்கு 289.97 மில்லியன் லிட்டர் (MLD) STP திறன் உருவாக்கப் பட்டுள்ளது மற்றும் 210.03 MLD STP திறனை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் செயல்படுத்தும் கட்டத்தில் உள்ளன. அம்ருத்தின் கீழ் பொது கழிவு சுத்திகரிப்பு ஆலைகளை அரசு எடுக்கவில்லை.

AMRUT இன் கீழ் நிதிகள் மாநிலம், யூனியன் பிரதேசங்களுக்கு ஒதுக்கப்படுகின்றன, வெளியிடப்படுகின்றன, திட்ட வாரியாக அல்ல. AMRUT இன் கீழ் கழிவுநீர் மற்றும் கழிவுநீர் மேலாண்மை துறையில் திட்டங்களின் அங்கீகரிக்கப்பட்ட செலவின் திட்ட வாரியான விவரங்கள் இணைப்பில் உள்ளன என்று தெரிவித்துள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஞா. மணிமாறன்

### ஆகஸ்ட் 11 (1984)



**மாணவ பருவம் தொட்டு கழகத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு 1958ல் கழக உறுப்பினராகி, 1966ல் தனது ஆசிரியர் பணியிலிருந்து விலகி முழுநேர கழகப் பணியாற்ற தொடங்கினார்.**

**1969ல் ‘கலைஞர் மன்றம்’ என்ற அமைப்பை துவக்கி, அதன் செயலாளராகவும் பின்னர் 1971ல் சிவகிரி பேரூர்க் கழகச் செயலாளராகவும், 1977 முதல் 1984 வரை வாசுதேவநல்லூர் ஒன்றியக் கழகச் செயலாளராகவும் பணியாற்றியவர்.**

**கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**‘வரதராஜன் கலைக்குழு’ எனும் கலைக்குழுவை துவக்கி அதன் மூலம் கழகத்தின் கொள்கைகளை பட்டிதொட்டியெங்கும் பரவிடச் செய்தார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# ஓட்டப்பிடாரம் தொகுதி பாக இளைஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சி!



ஓட்டப்பிடாரம், ஆக.11-

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலில், கழக இளைஞர் அணிச் செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின் பேரில் சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சியை கழக இளைஞர் அணி வழங்கி வருகிறது.

அந்த வகையில் ஓட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதிக்கான சமூக வலைதளப் பயிற்சி, மாவட்டக் கழகச் செயலாளர் மீன் வளத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையில், மாநில துணைச் செயலாளர் இன்பா.ஏ.என்.ரகு முன்னிலையில் 09.08.2025 அன்று நடைபெற்றது. மாவட்ட அமைப்பாளர் பை.மு.ராமஜெயம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் சமூக வலைதளங்களைப் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து கழக செய்தித் தொடர்பு துணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூரத்தி , சமூக வலைதளத்தை ஆக்கப்பூர்வமாக எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து சமூக வலைதள தன்னார்வலர் இளமாறன் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.